HHR16-1-3-TA

# எல்லா கிறிஸ்தவர்களும் எடுத்துகொள்ளப்படுவார்கள் என்பதற்கான வேதாகம அடித்தளம் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், எதிர்காலத்தில் உலகத்தையே அசைக்கும்விதமான மூன்று காரியங்கள் நிகழும் என்று வேதாகமம் கூறிக்றது. முதலாவது, எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் காணாமல் போவார்கள்; இரண்டாவது, உலகத்தை ஆளும் அதிகாரம் ஐக்கிய நாடுகளிடமிருந்து பறிக்கப்படும். மூன்றாவது, உலகத்தின் தலைவன் எழும்பி தன்னால் இந்த உலகத்திற்கு சாமாதானத்தை கொடுத்து நிலைபடுத்த முடியும் என்பான். இப்படி நடக்க காரணம் என்ன? வேதம் சொல்கிறது, "கர்த்தர் எக்காள சத்தத்தோடு வானங்கள் மீது வருவார்... கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பிறகு உயிரோடு இருக்கும் நாமும் கண்ணிமை பொழுதில் மேகங்கள் வழியாய் சென்றிடுவோம்; மேகங்கள் நடுவே தேவனை சந்திப்போம்; அவரோடு கூட நித்திய நித்தியமாய் வாழ்ந்திடுவோம்." இந்த வல்லமையான நிகழ்வு சம்பவிக்கும்போது, அவிசுவாசிகள் மட்டுமே பூமியில் கைவிடப்பட்டு காணப்படுவார்கள்.

இன்றைக்கு நம்முடைய தேசத்தில் இருக்கும் தீர்க்கதரிசனங்களை பற்றி நன்கு அறிந்த 3 மேதைகளை அழைத்திருக்கிறேன் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு சம்பவிக்க இருக்கும் எடுத்துகொள்ளுதலை பற்றி வேதாக ரீதியில் விளக்கிடுவார்கள். அவர்கள் Dr. எட் ஹின்சன், ராளிங்க்ஸ் டிவினிட்டி பள்ளியின் முதல்வர் மற்றும் லிபர்டி பல்கலைகழகத்தின் முன்னிலை பேராசிரியராக இருக்கிறார். இவர் ராஜா வருகிறார் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில்

பிரசங்கியாளராக இருக்கிறார், நாற்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார் மேலும் ஐந்த ஸ்டடி பைபில்களின் எடிடராகவும் இருக்கிறார். இரண்டாவது, Dr. மார்க் ஹிட்ச்காக், வேதாகம வெளிப்பாடு பிரிவின் துணை பேராசிரியராக டல்லாஸ் தியாலஜிகல் செமினரியில் பணிபுரிகிறார். வேதாகம தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், பெயித் பைபிள் திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார். மூன்றாவது, Dr. ரான் ரோடாஸ், வசனங்களில் ஆராய்ந்து காரணங்களை அறிதல் ஊழியங்களின் தலைவராக இருக்கிறார். ஐவரும் டல்லாஸ் தியாலகிகள் செமினரியில் பணிபுரிந்துவருகிறார் தீர்க்கதரிசனங்களை குறித்து 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இன்றைய ஜான் அன்கெர்பெர்க் விசேஷ தொகுப்பினை காண உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

நான்தான் ஜான் அன்கெர்பெர்க், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நேயர்களே, நீங்கள் வலைத்தளம் மற்றும் சோஷியல் மீடியாக்கள் மூலம் பகிர்ந்துகொள்ளும் காரியங்களை ஆர்வத்தோடு பார்த்து வருகிறேன். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட எட்டு மில்லியன் மக்கள், எங்களோடு தொடர்ப்பில் இருந்து வருகிறீர்கள். இதில் சுவாரஸ்யமான காரியம் என்னவென்றால், இந்த நிகழ்சிகளை நாம் ஒளிபரப்பு செய்திட முக்கிய காரணம், கிறிஸ்து மீண்டும் இந்த பூமிக்கு வர போகிறார் என்பதை  நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான். எடுத்துக்கொள்ளப்படுதல் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும்; உபத்திரவ காலம் என்றால் என்ன என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். வேதாக தீர்க்கதரிசனங்களை குறித்த பல கேலிகள் உங்களுக்கு இருக்கலாம். இந்த

தலைப்பை நீங்கள் புரிந்துகொள்வதற்கு உதவியாக நமது தேசத்திலுள்ள மூன்று சிறந்த மேதைகளை அழைத்து இருக்கிறேன். அவர்கள் Dr. எட் ஹிந்சன், Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடாஸ்.

இன்றைக்கு நாம் ஆதி திருச்சபையை குறித்து சில காரியங்களை பார்க்க இருக்கிறோம், புதிய ஏற்ப்பாட்டில் பெரும்பாலான இடங்களில் வாசிக்கிறது போல, ஏன் ஆதிசிருச்சபையினர் இயேசு மறுபடியும் எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் திரு ம்பி வருவார் என்று நம்புவதற்கான காரணத்தை பார்க்க இருக்கிறோம். அதை நாங்கள் சம்பவிக்க போகிறவைகளின் உபதேசம் என்று அழைக்கிறோம், நினைவில்வைத்து கொள்ளுங்கள். இன்றைக்கு அதற்கான வசனங்களை உங்களுக்கு காண்பிக்க இருக்கிறோம், ஏனென்றால் இந்த சத்தியத்தை அதில் காணமுடியும். அடுத்த வினாடியில் இயேசு கிறிஸ்து வரமுடியுமா? வேதாகமம் என்ன சொல்கிறது? சென்ற வாரங்களின் நிகழ்ச்சியை பார்க்க தவறியவர்களுக்காக முந்தின காரியங்களை வேதாகம பகுதிகளை சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். கொரிந்தியர் புத்தகத்தில், 1 கொரிந்தியர் 15, அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு இதை கூறுகிறார், “இதோ, ஒரு இரகசியத்தை வெளிபடுத்துகிறேன்; நாம் எல்லாரும் நித்திரை அடைவதில்லை, ஆனால் மருரூபமாக்கப்படுவோம், ஒரு நொடி பொழுதில், கண்ணிமைக்கும் நேரத்தில் கடைசி எக்காளத்தின் போது நடக்கும். எக்காள தொனியின் சத்தம் கேட்கும், மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.” எட், இரகசியம் என்னது? அவர் இங்க எதை பற்றி பேசிகிறார்?

**Dr. எட் ஹின்ட்சன்:** இரகசியம் என்பது இதற்கு முன்பாக சொல்லப்படாத ஒரு விஷயமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டிலிருந்து கர்த்தராகிய இயேசுவை பற்றிய

வார்த்தைகள் உயிர்த்தெழுதலை குறித்த வாக்குத்தத்தங்கள்  அவர்களுக்கு தெரியும், ஆனா எடுத்துகொள்ளப்படுதலை பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது- அது எப்போது சம்பவிக்கும், உயிரோடு இருப்பவர்கள் எடுத்துகொள்ளப்படுவார்கள், மரித்தவர்ளும் எழுந்திருப்பார்கள் என்று தெரியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அடுத்ததாக இயேசு சொன்ன வார்த்தைகளை பார்த்தோம் யோவான் பதினான்கில் இயேசு கூறியிருக்கிறார்," உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாக இருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் உங்களுக்கு சொல்லியிருப்பேன். உங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண போகிறேன். நான் மறுபடியும் வந்து நான் இருக்கும் இடத்தில் நீங்களும் என்னோடு கூட இருக்கும்படியாக உங்களை அழைத்து சென்றிடுவேன்." மார்க், இவர் எதை பற்றி சொல்லுகிறார்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** எனக்கு, இந்த பகுதி ரொம்ப பிடிக்கும் ஏன்னா ஒரு நபராக இங்கு நின்று, வாக்குத்தத்தம் தருகிறார், நமக்கு ஒரு இடம் இருக்கிறது. நாம் ஏதோ ஒரு நிகழ்வு சம்பவிக்க போகிறது என்றுஎதிர்பார்த்துகொண்டு இருப்பது இல்லை, ஒரு நபருக்காக காத்திருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பார்த்துகொண்டு இருக்கிறோம். இந்த பகுதியில், இதுல ஒரு விஷயம் சேர்க்கப்பட்டு இருப்பதை பார்க்கிறேன், அதாவது இங்க, இயேசு நமக்காக வருவதாகவும், நாம் அவரோடு கூட இருப்போம் என்று எழுதப்பட்டு இருக்கிறது. நாம் பிதாவின் வீட்டிற்கு போக போகிறோம். ஏனென்றால், சிலருடைய கருத்து என்னவென்றால் இரண்டாம் வருகையின் போது நாம் இயேசுவை சந்திக்க எடுத்துக்கொள்ளப்படும் போது உடனே திரும்ப அவரோடு சேர்ந்து இந்த பூமிக்கு வந்திடுவோம் என்கின்றனர். இந்த வேத பகுதி கூறுகிறது அவர் வரும்போது

நமக்காக வந்து  நம்மை அவரோடு சேர்த்து கொள்வார், நம்மை பிதாவின் வீட்டிற்கு அழைத்து சென்றிடுவார். நாம் பரலோகத்திற்கு சென்றிடுவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி.பொதுவா, ரான், ஜனங்க கேட்ப்பாங்க, “வேதாகமத்தில் எடுத்துகொள்ளப்படுதலை பற்றி எங்க சொல்லப்பட்டு இருக்கிறது? அதாவது, வசனங்கள்ள எங்கயுமே எடுத்துகொள்ளப்படுதல் என்ற வார்த்தையை பார்க்க முடியல, ஆல்ரைட்? சரி, நேயர்களே, இப்போது கவனமாக திரையிலுள்ளதை கவனியுங்கள், 1 தெசலோனிக்கேயர் 4:16-18. “(கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) கர்த்தர் தாமே மிகுந்த ஆராவாரத்தோடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் எக்காள தொனியோடும் வானத்திலிருந்து இரங்கி வருவார்...” அதற்கு பிறகு அவர் சொல்கிறார், “கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடு இருக்கும் நாமும் அவரோடு எடுத்துக்கொள்ளப்பட்டு, இங்கதான் ராப்ச்சர் என்ற வார்த்தை வருகிறது, ஹர்பாசோ, கிரேக்க வார்த்தை, லத்தீனில் ரபேரே, இந்த ரபேரே என்ற வார்த்தையில் இருந்துதான் ராப்ச்சர் என்ற வார்த்தை வந்தது. உயிரோடு இருக்கும் நாமும் மத்திய ஆகாயத்தில் தேவனை சந்திக்க எதிர்கொண்டு போகும்படி எடுத்துகொள்ளபடுவோம்: நாம் என்றென்றைக்குமாய் கர்த்தருடனே கூட இருந்திடுவோம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே ஒருவரை ஒருவர் தேற்றுங்கள்.” இந்த பகுதி மற்ற இரண்டு பகுதிகளோடு எப்படி இணைகிறதென்று சொல்லுங்கள்.

**Dr.ரான் ரோடஸ்:** இதை, பலவிதங்களில் இணைத்து சொல்ல முடியும். அதாவது, உதாரணமாக, கிறிஸ்து ஜனங்களை பூமியில் இருந்து எடுத்துக் கொள்ளுதல், அதாவது கிறிஸ்தவர்களை தம்மோடு பூமியில் இருந்து தம்மோடு

எடுத்துகொள்வதை யோவான் 14:1-3 பார்க்கிறோம். அதை நீங்கள் என்னிடமாக ஏற்றுகொள்வேன் என்றும் கூறுகிறார். இங்க 1 தெசலோனிகேயர் 4:16-17ல் விவரிக்கப்பட்டிருக்கிற விதம் கிறிஸ்து பரலோகத்தில் இருந்து இறங்கி வருவார், மத்திய ஆகாயத்தில் வருவார், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், மேலும் உயிரோடு இருக்கிறவர்களை கிறிஸ்து அப்படியே பூமியில் இருந்து எடுத்துகொள்வார். அவர்கள் மத்திய ஆகாயத்தில் தேவனை சந்திக்கும்படி எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இந்த மூன்று பகுதிகளுடைய சிறப்பம்சம் என்னவென்றால் கிறிஸ்துவை நாம் முகமுகமாக தரிசிக்க போகிறோம், அந்த ஐக்கியம் என்றென்றைக்கும் முடிவு பெறாமல் நிலைத்து நிற்கும். இதுல இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால் அந்த சமயத்தில் நாம் பெற்றுக்கொள்ள இருக்கும் சரீரமானது, மருரூபமடைந்த சரீரம், மகிமையடைந்த சரீரம், அது முதிர்வு அடையாமல் இருப்பதோடு, அது சாவாமையுள்ளதாயும் இருக்கிறது, ஆனால் இதெல்லாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதற்கு ஏற்ற உடையாக இருக்கும். இப்ப, இதற்கு மேல சிறந்தது என்ன இருக்குது?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஒரு விஷயத்தை ஜனங்க புரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறேன். உங்ககிட்ட நாங்க சொல்றது எல்லாமே வசனங்களாக இருக்கிறது. இந்த வார்த்தைகளின் அர்த்தங்கள் என்ன சொல்கிறது என்ற தீர்வை அறிந்திடவேண்டும். இந்த வார்த்தைகளை வாசித்திருக்கிறோம், உண்மை எனவேன்றால், இதிலிருந்து சில முடிவுகளை எடுக்கிறோம். எட்?

**Dr. எட் ஹின்ட்சன்:** ஜனங்கள் தங்களுக்கு தாங்களே நினைப்பூட்டி கொள்வது அவசியமென்று நினைக்கிறேன், ஒவ்வொரு கிறிஸ்துவ அமைப்புகளை, சேர்ந்தவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நம்புகிறார்கள். இது

ஒவ்வொருவருடைய இறையியல் பாகத்தின் பங்காக இருக்கிறது. அவங்க யாராக இருந்தாலும் சரி, பாப்டிஸ்ட், கத்தோலிக்கர், பிரெஸ்பிடேரியன், மெதடிஸ்ட், அமைப்புகளை சாராதவர்கள், கரிஸ்மாட்டிக், பெந்தேகொஸ்தே, என அனைவரும் இரண்டாம் வருகையை நம்புகிறார்கள். கேள்வி என்னவென்றால் இது எப்போது எப்படி நடக்கும் என்பதுதான். இது எப்போது சம்பவிக்கும், எப்படி சம்பவிக்கும், நாம் எப்போது வேண்டுமானாலும் நடக்கும் என்று எதிர்பார்ப்போடு காத்திருக்க வேண்டிய ஒன்றா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இப்ப நாம பேச போகிற காரியங்களில் ஒன்று என்னவென்றால், இயேசு எந்த நேரத்திலும் வருவார் என்ற நிச்சயத்தோடு இருப்பது சத்தியமா? இதைத்தான் ஆதி கிறிஸ்தவர்கள் விசுவாசித்தார்கள், அதை வசனங்களில் இருந்து பார்க்க இருக்கிறோம். அந்த கேள்வியோடு கூட அவர் எப்போது வேண்டுமானாலும் வந்திடுவாரென்றால், அவர் வரும்போதும் எப்படி கிறிஸ்தவர்களை பூமியிலிருந்து எடுத்துகொள்வார் என்று தெரியும், நம்மை உபத்திரவ காலத்திற்கும் வரப்போகிற கோபாக்கினையின் நாளுக்கும், விளக்கிடுவார் என்று தெரியும். சரியா?

இன்றைக்கு ஒரு வேதாகம பகுஹ்டியோடு துவங்கிடுவோம் இது ஒரு அருமையான வேத பகுதி இதை ஜனங்களுக்கு வெளிப்படுத்திடலாம். 1 தெசலோனிகெயர் 1:9-10. பவுல் தேசலோநிகேய சபைகளுக்கு எழுத்தும் போது இந்த வார்த்தைகளை சொல்லி எழுதுகிறார். நீங்களும் பார்க்கும்படியாக அதை திரையில் காண்பிக்க விரும்புகிறேன். “நீங்கள் விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்து எழும்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்தில்

இருந்து வருவதை எதிர்பார்த்துகொண்டிருக்கிறீர்கள்." உண்மையில், இது அவிசுவாசிகளை குறித்து சொல்லுகிற வசனம்தான். ரான், இதிலிருந்து பார்க்கலாம். "விக்கிரகங்களைவிட்டு தேவன் பக்கமாய் திரும்பினீர்கள்." என்ன சொல்றாருன்னா முதலாவது, "ஜீவனுள்ள ஒன்றான மெய் தேவனுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும்."

**Dr.ரான் ரோடஸ்:** சரி, அதாவது, புறஜாதிகள் வெளியில் இருக்கும் பலவிதமான வடிவங்களில் இருக்கும் தெய்வங்கள் என்பவைகளை விசுவாசித்தார்கள். அவைகளுக்கு வாய் இருந்தும் அவைகள் பேசாது; அவைகளுக்கு காதுகள் இருந்தும் கேட்க்காது; அவைகளால் உண்மையில் எதையுமே செய்ய முடியாது. அதற்கு அப்படியே எதிராக இருப்பது, ஜீவனுள்ள தேவனானவர் தமது ஜனங்கள் மத்தியில் கிரியை நடப்பிக்கிற தேவன். ஜெபங்களுக்கு பதில் கொடுப்பதில் அலுவல் நிறைந்தவர். அவர்களுக்கு வெளிபடுவார்; அவர்களுக்கு வெளிப்பாடுகளை தருவார்; அவர்கள் எப்படி செயல்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதை சொல்வார். இங்க நாம பேசீட்டு இருக்கிற காரியத்தை பொறுத்தவரை, வரும் காலத்தில் நடக்கும் காரியங்களை வெளிபடுத்துகிறார், அதில் வரப்போகிற நிகழ்வுகளின் உபதேசமும் அடங்கும்.

இந்த காரியத்தில் நமக்கு சொள்ளபட்டிருப்பது என்னன்னா, அதாவது, அவருடைய குமாரன் வானத்திலிருந்து வரும்படி காத்திருக்க கற்றுத்தருகிறார். இது அருமையானதேன்று தோன்றுகிறது, ஏன்னா அந்த பகுதியில் சொல்லப்படாத ஒன்றை கவனிக்கணும். அந்த பகுதியானது நாம முத்திரை நியாயத்தீர்ப்பிற்கோ எக்காள நியாயதீர்ப்பிற்கோ அல்லது கலச நியாயதீர்ப்பிற்கோ காத்திருப்பதாக கூற வில்லை. அர்மகேதான் யுத்தம் நடக்கும்படி காத்திருக்கிறோம் அதற்கு பின்பு தேவன் வருவார் என்பதாகவும் சொல்லப்படவில்லை. அந்த மாதிரி எதுவுமில்லை.

அதில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் அவருடைய குமாரன் வானத்திலிருந்து வரும்படி காத்துகொண்டு இருக்கிறோம். வேறுவிதமா சொன்னா, அடுத்த நடக்க வேண்டியது என்னன்னா எடுத்துக்கொள்ளபப்படுதலில் குமாரனின் வருகைதான். தீர்க்கதரிசன நாள்காட்டியில் அடுத்த நிகழ்வு இதுதான். அதற்கு எந்த அடியாளும் கிடையாது. இரண்டாம் வருகைக்கு முன்பு 7 வருடத்தின் அடையாளம் இருக்கிறது; சபை எடுத்துகொள்ளப்படுதலை குறிக்கும் அடையாளம் என்று எதுவுமே கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. இதை இன்னும் கொஞ்சம் விளக்கமாக பார்க்கலாம், மார்க். உண்மை என்னன்னா இந்த கிரேக்க வினைசொல்லான "எதிர்நோக்கியிருத்தல்" என்பது விசேஷமான விதத்தில் பவுல் பயன்படுத்தியிருக்கிறார். அதற்கான விளக்கத்தை சொல்லுங்கள். இதற்கு சிறந்த உதாரணத்தையும் சொல்லுங்க.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, அவர் பயன்படுத்தும் வார்த்தை, அனாமீனியன், இதற்கு அர்த்தம் காத்துகொண்டு இருப்பதாகும். ஒருவருக்காக காத்துகொண்டு இருப்பதை குறிக்கிறது. வேறுவிதமாக சொன்னால், உங்க வீட்டிற்கு ஒருவர் வருவதற்காக ஒரு எதிர்பார்ப்போடு அந்த நபருக்காக நீங்கள் காத்துகொண்டு இருப்பதற்கு ஒப்பாகும், அவங்க வரணுன்னு காத்துகொண்டு இருக்கிறீர்கள்,. இதில விஷயம் என்னவென்றால், அதாவது, அந்த நபர் எப்பவேண்டுமானாலும் வந்திடுவார் என்பதால் நீங்க தூங்க போகாம இருக்க வாய்ப்பிருக்கு. அதுமாதிரிதான் இயேசு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வந்திடுவார் என்பதை வலியுறுத்துகிறது. வரப்போகும் நிகழ்வு என்று சொல்லும்போது, இயேசு மறுபடியும் திரும்பி வந்திடும் நிகழ்வு, அது உண்மையாகவே உடனே நடக்குன்னு சொல்ல அமுடியாது. ஆனா அது நிச்சயமாக சம்பவிக்க போகிற ஒன்று, ஆனால்

எப்போது நடக்கும் என்று சொல்ல முடியாது. அது எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் சம்பவிக்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. A.T. ராபர்ட்சன், கிரேக்க பண்டிதர், இதற்கு காத்திருப்பது மட்டும் அர்த்தம் அல்ல, எதிர்பார்ப்போடு காத்திருப்பதையும் குறிக்கிறது என்கிறார். உறவினர்கள் வருவார்கள் என்று தெரிந்து அவர்களுக்காக காத்திருப்போம், ஆனா அவங்க வரமாட்டாங்க. நீங்க தூங்கவும் போக மாட்டீங்க, நீங்க விழிப்போடு இருந்து அவங்க வந்து சேரும்வரை ஆவலாக காத்துக்கொண்டே இருப்பது போன்றதாகும்.

**Dr. எட் ஹின்ட்சன்:** ஜான், உண்மையில், நாம, இயேசுவுக்காக காத்திருக்கிறோம் என்பதை புரிந்து கொள்வது ரொம்ப முக்கியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மைதான்.,

**Dr. எட் ஹின்ட்சன்:** அந்தி கிறிஸ்து வருவதற்கு நாம் காத்துகொண்டு இருப்பதில்லை. இதை சொன்னால் எடுத்துக்கொள்ளப்படுதலின் கண்ணோட்டமும் புரிந்துகொள்ளுதலும் முற்றிலும் மாறுபடும். உபத்திர காலத்திற்கு பிறகு எடுத்துகொள்ளப்படுதல் சம்பவித்தால், நீங்க இப்ப அந்தி கிறிஸ்துவுக்கு தான் காத்துகொண்டு இருக்கணும், ஆனால் வசனங்கள் அனைத்தும் நாம் காத்திருப்பது அந்திகிறிஸ்துக்கு அல்ல, இயேசு கிறிஸ்துவுக்கு என்பதை தெளிவுபடுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பரலோகத்தில் இருந்து அவர் எப்போது வேண்டுமானாலும் வந்திடுவார் என்பதற்காக அவர்கள் பார்த்துகொண்டிருந்தார்கள். இங்க சொள்ளபட்டிருகும் எதிர்பார்த்துக்கொண்டு

என்பதன் அர்த்தம் இதுதான். இதைதான் வரப்போகிற காரியமாக கருதுகிறோம். இதை பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கி சொல்லுங்க.

**Dr. எட் ஹின்ட்சன்:** அதாவது, என்ன நடக்கபோகுது என்ற எதிர்பார்ப்புடன் காத்துகொண்டு இருக்கிறோம். அது எப்ப வேண்டுமானாலும் சம்பவிக்கலாம். சரி, இயேசுவின் வார்த்தைகளில் இருந்து அவருடைய வருகையின் நாளையும் நாழிகையையும் ஒருவரும் அறியவில்லை என்பதை அறிந்துகொள்கிறோம். ஜனங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன், “அது எப்போது என்று யோசித்து உங்க நேரத்தை வீணாக்காதீர்கள். எப்போதும் ஆயத்தமாக இருங்கள், ஏன்னா இயேசு எந்த நிமிஷத்துல வேண்டுமானாலும் திரும்பி வந்திடலாம்.” அதுதான் முக்கியமானது. கண்களை வானத்திலும் கால்களையும் பூமியிலும் வைத்துகொண்டு இருங்கள். தேவனிடத்தில் இருந்து அழைப்பை பெற்றிருக்கிறோம், அவர் வரும்வரை செய்யவேண்டிய வேலை இருக்கிறது. ஆனால்அவர் இப்போது வருவார் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம், ஏன்னா வரப்போகிற சம்பவங்களின் காரியங்கள் அதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, W. E. வைன், கிரேக்க பண்டிதர், சொல்லியிருக்கிறார் அவங்க தொடர்ந்து பொறுமையோடு இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக காத்ஹ்டிருக்கிரார்கலாம். ஆனா, மார்க், தெசலோனிக்கேயர்களுக்கு இந்த யோசனை எங்கிருந்து வந்தது?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, பவுல் தமது இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது குறைந்தது மூன்று வாரங்கள் தெசலோனிகேயாவில் தங்கியிருந்தார். பவுல் அங்க இருந்த சமயத்தில், இந்த காரியங்கள் நடந்தது, இவங்க புரஜாதியில் இருந்து

இயேசுவை விசுவாசித்து ஏற்றுகொண்ட ஜனங்கள். பவுல் அங்க சில வாரங்கள் இருந்தார், அவர்களுக்கு வேதாகம தீர்க்கதரிசனங்களை கற்றுகொடுக்கிறார். இது பார்க்கும்போது, அநேகர் இன்றைக்கு சொல்லும் கருத்து என்னன்னா, அதாவது, கடைசியா நீங்க ஜனங்களுக்கு சொல்ல வேண்டியது என்னன்னு பார்த்தா இந்த கடைசி காலத்தை குறித்த தீர்க்கதரிசனங்கள் தான் ஆனா தினால் அவங்க குழம்பி போறாங்க, அல்லது புதிய கிறிஸ்தவர்களுக்கு இதை ஆரம்பத்தில் சொல்லாமல் இருக்கலாம். ஆனா பவுல் இங்க இருந்த காலகட்டத்தில் அந்த விசுவாசிகளுக்கு அந்திகிறிஸ்துவை பற்றி சொல்றாரு, கர்த்தருடைய நாள், எடுத்துகொள்ளப்படுதலை சொல்கிறார். இந்த சத்தியங்களை அவர்களுக்கு கற்றுதந்தார். இயேசு மறுபடியும் எப்ப வேணுன்னாலும் வந்திடுவார் என்பதை பவுல் அவர்களுக்கு  போதித்தார். 1 தெசலோனிகேயர் நான்கில் பவுல் கூறுகிறார், “உயிரோடு இருக்கிற நாம் அனைவரும்,” அதில் தன்னையும் சேர்த்துகொள்கிறார், ஏன்னா பவுல் தன்னுடைய வாழ்நாளின் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இயேசு திரும்பி வருவார் என விசுவாசித்தார். அதனால்தா பவுல் இயேசு திரும்ப வந்திடுவார் என்றும் அவருடைய வருகைக்கு நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு தெளிவாக கற்றுகொடுத்தார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆம். அவர்கள்குமாரனாகிய  மரித்தோரிலிருந்து எழுப்பினவரும் இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துகொண்டிருக்கிறார்கள்.” இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம் திரும்ப வந்ததும் இந்த வார்த்தைகளை தனித்தனியாக பிரித்து பார்க்க போகிறோம் என்று நினைக்கிறேன். நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார் என்றால் என்ன? அவர் நம்மை உண்மையில் விடுவிக்கிறாரா,

கோபாக்கினை, இனிவரும் கோபாக்கினை. பவுல் நேர்த்தியான பதத்தை சொல்லுகிறார். இந்த காரியத்தோடு பார்க்கும்போது இவை எப்படி பொருந்துவதாக இருக்கிறது? தொடர்ந்து இணைந்திருங்கள், நாம் திரும்ப வந்ததும் இதை பற்றி பேசிடலாம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டு இருப்பவர்கள் Dr. எட் ஹின்சன், Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடாஸ், மிகவும் அருமையான தலைப்பை பற்றி பார்த்துகொண்டு வருகிறோம். சபையில் இருந்த ஆதி கிறிஸ்தவர்கள், இயேசு மறுபடியும் எந்த நேரத்திலும் வந்திடுவார் என்பதை விசுவாசித்தார்களா? இயேசு மறுபடியும் எந்த நேரத்திலும் வந்து நம்மை எடுத்துகொள்வார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டியது அவசியமா, சரியா? இந்த வசனத்தை 1 தெசலோனிகேயரில் பார்க்கிறோம், இப்போதும் இந்த வசனத்தின் மைய பொருளை பார்த்து கொண்டு இருக்கிறோம். அவர் சொல்கிறார், அதாவது, பரலோகத்தில் இருந்து அவருடைய குமாரனும், மரித்தோரில் இருந்து எழுதவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து வர காத்திருக்கிறோம், இந்த ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும், “இனிவரும் கோபாக்க்னையினின்று நம்மை நீங்கலாக்கிடுவார்.” எட், இந்த நீங்கலாக்கிடுவார் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

**Dr. எட் ஹின்ட்சன்:** இந்த விடுவிக்கபப்டுதல் என்ற காரியம் தொடர்ந்து நடக்கும் செயலாக இருக்கிறது; இனிவரப்போகிற கோபாக்கினைக்கு அவர் நம்மை விடுவிக்கும் செயலில் ஈடுபட்டு கொண்டு இருக்கிறார். வேதாக தீர்க்கதரிசனத்தின்

கேள்வி இதுதான், நாம் விலக்கப்படவேண்டிய அளவிற்கு எதிர்காலத்தில் சம்பவிக்கப்போகிற அந்த கோபாக்கினை என்ன எப்படிபட்டது?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. சரி, மார்க், அதாவது, ஜியார்ஜ் மில்லிகன் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவர் சொல்கிறார் நீங்கலாக்கி என்ற இந்த வார்த்தை வல்லமையின் வெளிப்பாடாக இருக்கிறதாம். இதை நாம் பேசிகொண்டிருக்கிற காரியத்தோடு எப்படி ஒப்பிட முடியும்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, எடுத்துகொள்ளப்படுதல் சம்ப விக்கும் போது நடக்க போகிற எல்லா நிகழ்வுகளையும் கொஞ்சம் யோசித்து பாருங்க. தேவனாகிய கர்த்தர் வானத்தில் இருந்து ஆராவாரத்தோடும், பிரதான தூதனின் சத்தத்தோடும் இரங்கி வந்திடுவார். எல்லா விசுவாசிகளின் மரித்த சடலங்களும் அது எங்க இருந்தாலும் சரி, அதாவது, எந்த கல்லறையில், இருந்தாலும் சரி, சிலர் ஒன்றுமில்லாமல் அரித்த நிலையில் இருக்கும், சிலது கட்டு மிருகங்களால் பீரிபோடபட்டு இருக்கும். அதாவது, செத்த சடலங்களை நினைத்து பாருங்கள். தனித்து நிற்கும் ஒன்று என பிரபஞ்சத்தில் எதுவுமில்லை என்று ஒருவர் ஒருமுறை சொல்லியிருக்கிறார். அதாவது, கர்த்தராகிய இயேசு எல்லா சரீரங்களை ஒன்று சேர்த்திடுவார், ஆவி அனைத்தும் அழிவில்லாததாய், சாவாமையுள்ளதாய், அழுகிபோகாத சரீரங்களாக மாறிடும். அதற்கு பிறகு உயிரோடு இருக்கிறவர்களும் நொடி பொழுதில் கர்த்தரோடு இருக்கும்படியாக எடுத்துகொள்ளப்படுவோம் அப்போது சாவாமையுள்ள சரீரத்தை பெற்று ஒரு நொடியில் மறுரூபமாகிவோம்.அதற்கான வல்லமை வெளிப்படும், சகலத்தையும் சிருஷ்டித்த ஒருவரால் மட்டும்தான் அது சாத்தியமாகும். அது தேவனுடைய வல்லமையின் கிரியையாகும் எடுத்துகொள்ளபடுதலில் தேவன் நம்மை விடுதலையாக்கிடுவார்.

**Dr.ரான் ரோடஸ்:** இதை நீங்க கோடிட்டு காட்டனுன்னு நினைக்கிறேன், ஏன்னா அப்போஸ்தலர்களின் புத்தகத்தில் கூட, அல்லது இயேசுவின் ஊழியத்தில் பார்க்கும்போது கூட, இயேசு ஒருவரை உயிரோடு எழுப்பினார் அப்போது அந்த வல்லமையான செயலை ஒரு உயிர்த்தெழுதலுக்கு அநேக சாட்சிகள் இருந்தது. ஒரே சமயத்தில் பூமியின் எல்லா இடங்ளிலும் எண்ணற்ற உயிர்த்தெழுதல் சம்பவிக்கும், உயிரோடு இருக்கிற எண்ணற்ற கிறிஸ்தவர்கள் மறுரூபவார்கள். இது அளவுக்கடந்த வல்லமையாக காணப்படுகிறது. தேவனுக்கோ இது ஒன்றுமே இல்லை. அதாவது, இதையும் இதற்கு மேலும் செய்ய வல்லமையுள்ள சர்வ வல்ல தேவனை பற்றிதான் பேசிக்கொண்டு இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா.

**Dr. எட் ஹின்ட்சன்:** இயேசு செய்த எல்லா அற்புதங்களும், இதுவரை எழுந்த நடக்கவும் ஓடவும் முடியாதவர்களுக்கு தான் நடந்தது. இது சரீர பிரகாரமான, மனிதனால், தேவன் இல்லாமல் செய்ய முடியாத அசாத்தியமான காரியங்கள்.

**Dr.ரான் ரோடஸ்:** ஆமா.

**Dr. எட் ஹின்ட்சன்:** இதே வல்லமை தான் எடுத்துகொள்ளப்படுதலின் போது சம்பவிக்கும் என்பதை இந்த அற்புதங்கள் வெளிபடுத்துகிறது. சிலவேளைகளில் விமர்சகர்கள் சொல்வார்கள். “சரி, நீங்க இரகசிய வருகையை பற்றி சொல்றீங்க இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும்தான சம்பவிக்கும்.” இல்ல, இது ரகசியமான ஒன்று அல்ல. பூமியின் மீது எங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் காணாமல் போகிறார்கள், என்பது இரகசியமான ஒரு காரியம் இல்லை. ஜனங்கள் அப்போது புரிந்துகொள்வார்கள், வாவ், என்னமோ நடக்குது. சரி, என்ன நடந்தது என்று

நினைக்கிற காரியத்தினால் ஒருவேளை வஞ்சிக்கப்பட வாய்ப்பிருக்கிறது, ஆனா ஏதோ சம்பவித்திருக்கிறது என்பதை புரிந்துகொள்வார்கள். வருத்தமான உண்மை என்னன்னா, அவர்கள் கைவிடப்பட்டார்கள் என்ற உண்மையை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அடுத்த வாரம் நிகழ்ச்சியில் இதெல்லாம் வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் சொல்லப்பட்ட விஷயங்களோடு பொருந்தும் படி எப்படி பார்க்க முடியும் என்று பார்க்கலாம். ஆனா, ரான், இந்த விஷயத்திற்கு வரும்படியாக விரும்புகிறேன். அவர் இதையும் சொல்லியிருக்கிறார், "நம்மை நீங்கலாக்கி விடுவிப்பவர்"  மகா வல்லமையான ஒரு செயல். இதற்கு ஏக் என்று பயன்படுத்துகிறார், கிரேக்க வார்த்தையான ஏக், இது, மட்டுமல்ல, "இனிவரும் கோபாக்கினை என்கிறார்." மேலுமிதர்கான கிரியேக்க வார்த்தை," கோபாக்கினை" வரப்போகிற காரியத்தை குறிக்கிற பதமாக இருக்கிறது.

**Dr.ரான் ரோடஸ்:** ரைட்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, இந்த வார்த்தையை பார்க்கலாம் ஏக். ஏக் என்றால் என்ன? அவர் நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார்.

**Dr.ரான் ரோடஸ்:** சரி, அதனுடைய அர்த்தம், "அதிலிருந்து"அல்லது, "பிரித்தெடுக்கப்பட்ட". அதாவது, தேவன் உபத்திர காலத்தின் ஊடாக நம்மை நடத்தி பாதுகாத்திட போறது கிடையாது. அந்த காலத்திற்கு முற்றிலும் நம்மை விளக்கி காத்திட போகிறார். அதை 1 தெசலோனிகேயர் 1:9-10ல மட்டும் இல்லாம, வெளிபடுதல் 3:10லயும் பார்க்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதே வார்த்தை

**Dr.ரான் ரோடஸ்:** சோதனைக்கு நாம் விளக்கி காக்கப்படுவோம் என்ற அதே வார்த்தைதான் இங்கயும் பயன்படுத்தப்படுகிறது, அதாவது உபத்திரவ காலத்தின் நேரம் அது. உபத்திர காலத்தின் பகுதியில் அல்ல, உபத்திரவ காலத்தின் பாதியில் அல்ல, உபத்திரவ காலத்தின் இறுதியில் அல்ல, சில கண்ணோட்டங்கள் இதைதான் சொல்கிறது, ஆனால் முழு சோதனை காலத்திற்கும் நம்மை விளக்கி காத்திடுவார். சபையானது இதற்கு விலக்கப்பட்டு இருக்கும். இந்த பதமானது, “கோபாக்கினை” என்பது, ரொம்ப முக்கியமானது, ஜான். ஆங்கிலத்தில் சில பதங்களின் கருத்து அழுத்தமாக சொல்லப்படுவதில்லை. நிஜத்தை வெளிபடுத்துவது இல்லை. ஆனா மூல பாஷையில் கிரேக்கத்தில் எல்லாம் என்ற அர்த்தத்தில் இருக்குது. உதாரணமாக, இன்றைய கிரேக்க இலக்கணத்தை வைத்து பார்க்கும்போது இந்த பதம் எப்படி இருக்கிறது எவ்வளவு துள்ளியமாக காரியங்களை வெளிப்படுத்துகிறது என்பதை புரிந்துகொள்வோம். இது பூமியின் மெது வரப்போகிற கோபாக்கினையின் குறிப்பிட்ட காலத்தை பற்றி சொல்கிறது. அந்த காத்திற்கு விலக்கப்பட்டதாக சபையானது காக்கபப்டும், விடுவிக்கப்பட்டு இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மையாகவே அவங்களுக்கு இதை பற்றி தெரிந்திருக்கிறது.

**Dr.ரான் ரோடஸ்:** ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே. அதாவது இதுக்கு முன்னால இதுவரைக்கும் சம்பவித்திராத ஒரு கோபாக்கினை இனிதான் வரப்போகிறது. இயேசு அவர்களை அதிலிருந்து அதாவது எத்தனை காலம் இருக்குமோ அத்தனை காலமும் வரப்போகிரதற்கு விளக்கி காப்பார்.

**Dr.ரான் ரோடஸ்:** நிச்சயமான உண்மை. இதை போதிக்கிற நபர் பழைய ஏற்பாட்டை கற்று தேர்ந்த ஒருவர் என்பதை நாம் மனதில் வைத்துகொண்டு செயல்படுவது நல்லது. அப்போஸ்தலனாகிய பவுலை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம், இதுவரைக்கு சிறந்த கற்றுதேர்ந்த யூதர்களில் ஒருவர். உண்மையாகவே கர்த்தருடைய நாளை பற்றியும் நிச்சயம் பழைய ஏற்பாட்டின் காரியங்களை அவருக்கு போதித்து சொல்லியிருப்பார்கள்,மனுதர்கள் மீது வர இருக்கும் கோபாக்கினையின் நாள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ரான், இங்க குறிப்பிட்ட சில பதங்கள இருக்கிறது, கோபாக்கினை, வரப்போகிற கோபாக்கினை," சரியா? இந்த கோபாக்கினைக்கு ஓர்ஜ் என்பார்கள், கிரேக்க வார்த்தை ஓர்ஜ். இதை பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு இரண்டிலும் பார்க்க முடியும். சில உதாரணங்களை சொல்லலாமா. அதை பற்றி அவர்களுக்கு தெரியும், பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு உதாரணம் சொல்லுங்க, எட்.

**Dr. எட் ஹின்ட்சன்:** சரி, முதலாவது செப்பனியா 1:15ல, சொல்லப்படுகிறது, "உக்கிரத்தின் நாள், இக்கட்டும் இடுக்கமுமான நாள்." பழைய ஏற்பாட்டில் இந்த மாதிரி விவரிக்கப்படும் ஒவ்வொரு இடங்களிலும், அந்தராமும், மந்தாரமும், நியாயத்தீர்ப்பு வருகிறது. இதில் கடைசிகால நிகழ்வுகளின் அடையாளம் இருக்கிறது, A.T. ராபர்ட்சன் தனது கிரேக்க இலக்கணத்தில் சொல்லியிருக்கிறார், இதுவரைக்கும் நடந்திராத சம்பவங்கள் எதிர்காலத்தில் சம்பவிக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள உதவியாக இப்படி எழுதப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓ, சரி, ரான், பழைய ஏற்பாட்டில் இருந்து வேறொரு வார்த்தையை சொல்லுங்க.

**Dr.ரான் ரோடஸ்:** ஏசாயா 13:9ல் இவ்விதமாக சொல்லப்பட்டு இருக்கிறது."

இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது." ஜான், இது இதைவிட மிகவும் மோசமானதாக இருக்க கூடும்.

**Dr.ரான் ரோடஸ்:** இது ஒரு காலத்தை குறிக்கிறது, எதிர்காலத்தில், இதுவரை மனிதன் அனுபவித்திராத விதமான தேவ கோபாக்கினை சம்பவிக்க போகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்போது நம்முடைய் தலைப்பிற்கு பொருத்தமாக இருக்கும் ஒரு வார்த்தையை உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறேன். உண்மையில், அநேகர் சொல்ல கேட்டிருக்கேன், "ஓ, தேவன் அன்பான தேவன். அவர் தமது ஜனங்களை நியாயந்தீர்க்க மாட்டார், நரகம் என்று ஒன்றுமில்லை." இந்த வசனங்கள் எல்லாம் தேவன் பரிசுத்த முள்ள தேவன் என்றும் ஒரு கோபாக்கினை வரப்போகிறது அதில் தேவன் எல்லாரையும் நியாயந்தீர்ப்பார் என்றும் விளக்கி சொல்கிறது.

**Dr.ரான் ரோடஸ்:** ஆமா, அது சரிதான். தேவன் அன்பின் தேவனாக இருக்கிறார், இருந்தாலும் அவர் பரிசுத்த தேவனாக இருக்கிறார் அவருடைய பரிசுத்தம் குலைச்சலாக்கப்படும்போது அவர் கோபாக்கினையை அனுமதிக்கிறார். இது பழைய ஏற்பாட்டின் உபதேசம் மட்டுமல்ல, இது புதிய ஏற்பாட்டின் உபதேசமாகவும் இருக்கிறது. யாரும் எதற்கும் தப்பித்து ஓடிட முடியாது. எல்லாரும் எல்லாவற்றிற்கும் கணக்கு கொடுக்க வேண்டும். நியாயத்தீர்ப்பு தாமதாக இருப்பதால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இருக்காது என்று பலரும் நம்புகிறார்கள். ஆனா உபத்திர காலம் வரும்வரை பொறுத்திருங்கள். அப்போது தேவனை

விசுவாசிக்காத ஜாதிகள் மேல் இறுதியாக தேவ கோபாக்கினை ஊற்றப்படுவதை காண்பீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இதை குறித்த நல்ல செய்தி என்னவென்றால், அவர், இயேசு சிலுவைக்கு சென்று நம்முடைய பாவங்களுக்கான விலையை செலுத்தி விட்டார். நம்மீதிருந்த தேவனுடைய கோபாக்கினையை அகற்றிவிட்டார். இயேசுவோடு ஒரு தனிப்பட்ட உறவு இல்லாமல் நீங்கள் வாழ்ந்துகொண்டு இருந்தால், நீங்கள் இன்னமும் வரப்போகிற உங்கள் மீதுள்ள கோபாக்கினைக்கு பாத்திரவானாக நின்றுகொண்டிருக்கிறீர்கள் அதற்கு அவசியமே இல்லை. அதை இயேசுவிடம் அளித்திடுங்கள். அவர் செலுத்திவிட்டார், நீங்கள் விடுதலை பெற்றிருக்கிறீர்கள். இது தேவன் உங்களுக்கு அருளும் ஒரு ஈவாகும். இப்ப வரப்போகிற கோபாக்கினைக்கு புதிய ஏற்பாட்டில் இருந்து ஒரு உதாரணத்தை சொல்லுங்கள்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** சரி, இயேசு மத்தேயு இருபத்தி நான்கில் ஒலிவ மலையில் இருந்து சொல்லும்போது, “உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிபோவது இல்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாள் குறைக்கபப்டும்.” கோபாக்கினை என்பது இப்போது தன்னிலே தானே ஒரு தரத்தை கொண்டு காத்துகொண்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம், இதை பற்றிதான் பவுல் 1 தெசலோனிகெயர் 1ல் சொல்லுகிறார், அதாவது இனிவரும் கோபாக்கினை, இனிவரும் கோபாக்கினையினின்று தங்களை நீங்கலாக்கி விடுவிக்கும் குமாரன்

பரலோகத்திலிருந்து வர காத்திருக்கிறார்கள். அவர் இவை எல்லாவற்றிலிருந்தும் நம்மை விளக்கி காத்திடுவார்.

வரப்போகிற காரியங்கள் என்ற உபதேசம், ஆதி திருச்சபையில் காணப்பட்டது. சில உதாரனங்கலஈ உங்கள் முன் வைக்க விரும்புகிறோம். புதிய ஏற்பாட்டில் மட்டும் நாற்பத்திநான்கு உதாரணங்களை பார்க்க முடியும். உங்களுக்கு பிடித்த ஒன்றை சொல்லுங்க, எட்.

**Dr. எட் ஹின்ட்சன்:** 1 கொரிந்தியர் 1:7, "நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும்படியாக ஆவலோடு காத்துகொண்டு இருக்கிறீர்கள்." எதிர்பார்ப்போடு நீங்கள் காத்துகொண்டு இருப்பீர்கள் என்றால், அவர் உங்களுக்காக வருகிறார் என்பதால் தான் நீங்கள் அவருக்காக எதிர்பார்ப்போடு காத்துகொண்டு இருக்கிறீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மார்க்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** பிலிப்பியர் 3:20, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது,அங்கிருந்து நம்முடைய இரட்சகர் வர காத்துகொண்டு இருக்கிறோம், கர்த்தராகிய இயேசு வருவார்.' அவர் வரும்படியாக ஆவலோடு காத்திருக்கிறோம், இதிலிருந்து அவர் எப்போது வேண்டுமானாலும் வருவார் என்பது நன்றாக புரிகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ரான்?

**Dr.ரான் ரோடஸ்:** தீத்து 2:13-14, நாம் நம்பியிருக்கிற இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்ப்பார்த்து கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது." நீங்கள் உபத்திர காலத்தின்

பாதிவரைகும் வேதனை அனுபவிப்பது அனந்த பாக்கியமல்ல, அலது உபத்திரகாலத்தின் முக்கால் பாகம், உபத்திரவ காலம் முழுவதும் இருப்பது பாக்கியமல்ல. இது அனந்த பாக்கியம் ஏனென்றால் நாம் உபத்திரகாலத்திற்கு தப்பித்து கொள்கிறோம். அதாவது, அந்த காலத்திற்கு நாம் அனைவரும் விளக்கபட்டவர்களாக இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, எனக்கு பிடித்தது மாரநாதா. இது ஒரு அராமிக் பதம், இதை கிரேக்க சபைகளில் பயன்படுத்தினார்கள், அதனால இதனுடைய அர்த்தம் அவர்களுக்கு தெரியும். இதனுடைய அர்த்தம், "என் ஆண்டவரே, வாரும்". அவர்களுடைய வாழ்த்தும் முறை "ஷாலோம்" என்பதாகும், ஹலோ, அப்பறம், "என் ஆண்டவரே, வாரும்." சரியா? அவங்க ஏன் இப்படி சொல்லுகிறார்கள்? ஏன்னென்றால் கர்த்தர் எந்த நிமிடத்திலும் வந்திடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்துகொண்டிருந்தார்கள். அவர் வரும்படியாக விரும்பினார்கள். பவுல் தன்னையும் அதில் சேர்த்துகொள்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அடுத்த வாரம், நேயர்களே,

எடுத்துக்கொள்ளப்படுதல் இரண்டாம் வருகைக்கு மாறுபட்ட ஒரு நிகழ்வாக இருப்பது ஏன் என்பதை பார்க்க  இருக்கிறோம். ஏன் இதற்கு இடையில் சில கால அவகாசம் காணப்படுகிறது. இதற்கு இடையில் உபத்திரவ காலம் இருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் இடையில் என்ன நடக்கிறது என்பதை வேதம் தெயளிவாக நமக்கு காட்டுகிறது. அதிலிருந்து ஒரு முடிவிற்கு நாம் வரவேண்டும். அதற்கான வசனங்களை நான் காண்பிக்க இருக்கிறேன். அந்த வசனங்கள் மூலமாகத்தான் நாம் தீர்வை பெற முடியும் என்று வேதாகமம் கூறிறது. அந்த இறுதி ஹ்டீர்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சரி, அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2016 A.T.R.I.